**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No.58 / 2025**

**Dated:19 .06.2026**

Name : அய்யம்மாள் (DW1)

**2, 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நீதிமன்ற அழைப்பாணை வந்தபிறகு நடராஜனை பார்க்கவில்லை. 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வக்காலத்து தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கில் அழைப்பாணையை தெரிந்து கொண்டு 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து எதிருரை தாக்கல் செய்துவிட்டு தற்போது வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எத்தனை சொத்திற்கு வழக்கு நடைபெறுகிறது என்று தெரியாது. தாவா சொத்துக்கள் எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்டது. வீடு பூர்வீக சொத்து, ஆனால் எனது தம்பி வாதி எடுத்துக்கொண்டார். 2ம் பிரதிவாதி நடராஜன் எனது தம்பி. அவர் கூல்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறார். தாவா வீட்டில் 2ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி திருப்பூரில் குடியிருந்து வருகிறார். அங்கு தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதி வசதியாக இருக்கிறார் என்றால் இல்லை. வாதியிடம் பணம் வாங்கிக்கொண்டு 2ம் பிரதிவாதி தாவா வீட்டில் குடியிருக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பூர்வீக வீடு என்பதால் எனது அப்பாவுக்கு பிறந்த 5 ஆண்மக்களுக்கு மட்டும் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவா வீட்டில் எனது அப்பாவுக்கு பிறந்த பெண் குழந்தைகளுக்கும் உரிமையுள்ளது என்றால் சரிதான். நிலத்திலும் எனக்கு உரிமையுள்ளது என்றால் சரிதான். ஆனால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை. திருமணத்தின்போது நகைகள் போட்டு சீர் செய்ததால் எனக்கு பாகமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் திருமணம் ஆனதிலிருந்து நிலத்தையோ, வீட்டையோ அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 2 இலக்க சொத்து ஆண்மக்களுக்கு மட்டும் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவா வீட்டில் வாதிக்கு 5ல் ஒரு பங்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவா வீடு பூர்வீக வீடு என்பதால் எனது அப்பா எனது தம்பிக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. தானப்பத்திரம் படி எனது தம்பி அனுபவிக்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா

நிலத்தை எனது அப்பா ஒத்தி வைத்தார் என்றால் சரிதான். ஒத்தித்தாரர்கள் தற்போது அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால சரிதான். ஒத்தி இதுவரை திருப்பவில்லை என்றால் சரிதான். ஒத்தி திருப்புவதற்கு எந்த பரிகாரமும் கேட்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.19 06:12:30 +0530

Sub Judge,
Usilampatti.